# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No.** **: 241/2019**

**நாள்** **: 19.07.2025**

**வா.சா.1 திரு. சுப்பையா –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனக்கு 7 மக்கள் உள்ளார்கள். மீனா, தேவி, ராமர், லட்சுமணன், சொர்ணமணி, சுமதி, சாந்தி ஆகியோர் எனது மக்கள் ஆவார்கள். நானும், எனது மக்களும் சேர்ந்துதான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான சண்முகையா பாண்டியன் என்பவருக்கு வா.சா.ஆ.9 ஆவணத்தின்படி கிரையம் செய்துகொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் சரியானவைதானா என்றால் நான் ஒன்றரை லட்சம்ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு அதற்கு இருமடங்காக ரூபாய் 3 லட்சம் என்று விவரம் கூறி மேற்படி ஆவணம் எழுதப்பட்டது. மேற்படி 1ம் பிரதிவாதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி சண்முகத்தாய் 1ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 6, 7, 8 பிரதிவாதிகள் அவரது மக்கள் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதியிடமிருந்து எனது மகள் தேவி என்பவர் கடந்த 23.07.2021ல் ஆலங்குளம் சார்பதிவகத்தில் பதிவுபெற்ற கிரைய பத்திர எண். 3607/2021ன் மூலமாக இந்த வழக்கிடை காலத்தில் கிரையம் எழுதி பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவைதான். மேற்படி பத்திரம் பதிவான விவரத்தை நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1ம்பிரதிவாதிக்கு நானும் என் மக்களும் சேர்ந்து 2ம் தபசில் சொத்தினை பொறுத்து வா.சா.ஆ.9 ன் மூலமாக எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி சரியானது என்பதால்தான் 1ம் பிரதிவாதி இறந்தபிறகு அவரது மகனான 7ம் பிரதிவாதியிடமிருந்து மேற்படி வா.சா.ஆ–9ல் காணும் 2ம் தபசில் சொத்தினை என் மகள் தேவி பெயரில் மறு கிரையம் எழுதி பெற்றோம் என்று சொன்னால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தை

பொறுத்து நான் கேட்டுள்ள பிராது 1 முதல் 3 பரிகாரங்கள் எனக்கு தேவையில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து கிரையம் எழுதிக்கொடுத்த எங்களுக்கு பூர்வீக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி சில்வியா அன்சி என்பவருக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் தபசில் சொத்து எனக்கு கிரையத்தின் மூலம் பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் எழுதிய ஆவண எழுத்தர் யார் என்பது தற்போது எனக்கு நினைவில்லை, அவர்கள்தான் ஆவணம் எழுத ஏற்பாடு செய்திருந்தார்கள். வா.சா.ஆ.10 அடமான ஆவணம் 2 ம் பிரதிவாதி ராமசாமி என்பவருக்கு நான் என் சுயநிலையில் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஆலங்குளம் ஊரை சேர்ந்த நடராஜன் என்பவரால் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதே ஆவண எழுத்தரான நடராஜன்தான் வா.சா.ஆ.11 ஆவணத்தையும் எழுதினார் என்றால் சரிதான். ஆவண எழுத்தரான நடராஜன் மீது எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு என்பதல் அவர் மூலமாக ஆவணம் எழுதினேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.12 அடமான பணப்பற்றுகை ரசீது எழுதி கொடுத்தவர் மேற்படி நடராஜன்தான் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி சில்வியா அன்சி கிரையம் எழுதிக்கொடுத்தபோது, அந்த ஆவணத்தில் பணப்பற்று விவரமாக ரூ.9 லட்சம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் தொகை பெற்றுக்கொண்டது ரூ.4 லட்சம், 2 ம் பிரதிவாதிக்கு கொடுக்கவேண்டியது ரூபாய் 50,000/–என்பதால் மேற்படி தொகையை விட இருமடங்காக ரூ.9 லட்சத்திற்கு கிரைய ஆவணம் எழுதப்பட்டது. வா.சா.ஆ–11 கிரைய பத்திரம் எழுதும்போது என்னை அடித்து துன்புறுத்தினார்களா, கட்டாயப்படுத்தினார்களா என்றால் இல்லை. அடமானம் என்று சொல்லி என்னை அழைத்து சென்று, கிரைய ஆவணம் எழுதி ஏமாற்றிவிட்டார்கள். இதுசம்பந்தமாக நான் போலீசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் கிரையம் செய்வதற்கு முன்னரே புகார் கொடுத்துவிட்டேன். வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் நான் கையெழுத்து செய்தபோது மாலை 5 மணி இருக்கும். ஆனால் மேற்படி ஆவணத்தில் நான் 3 முதல் 4 மணிக்குள் கையொப்பமிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. தற்போது சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்தும் கணிணி மயமாக்கப்பட்டுவிட்ட நிலையில் முறைகேடுகளை தவிர்ப்பதற்காக மாலை 5 மணியுடன் கணிணி கட்டுப்பாட்டு அறையில் கணிணியின் செயல்பாடுகள் முடிக்கப்பட்டுவிடும் என்றும், நான் 5 மணிக்கு ஆவணத்தில் கையெழுத்து செய்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனது கட்சிப்படி பார்த்தாலும், நான் மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய காலதாமதம் ஏற்பட்டு காலாவதி தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இவ்வழக்கில் நான்தாக்கல்செய்துள்ள வா.சா.ஆ. 13 முதல் 16 வரையிலான புகார் மனுக்களை வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள ஒரு மனு எழுத்தர் மூலமாக எழுதினேன். நான் சட்ட நுணுக்கங்களுடன் மேற்படி புகார் மனுவை தயார் செய்துள்ளேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் கொடுத்த புகார் மனுக்களின் மீது காவல்நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டார்கள். வா.சா.ஆ.9, 11 ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்ட கிரைய ஆவணங்களாக உள்ள நிலையில் அவற்றின் நோக்கம் கடன் அடிப்படையிலானது என்பதை காட்டும்வகையில் வேறு ஆவணங்கள் எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல்செய்துள்ள வா.சா.ஆ.9, 11 கிரைய ஆவணங்கள் சரியான மறுபயனுக்கு ஒருமித்த எண்ணத்தோடு என்னால் சரியாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றும், அதற்கு விரோதமாக தற்போது நான் கடன் ஆவணம் என தவறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திலுள்ள வீட்டிற்கு 4ம் பிரதிவாதியின் பெயரில் வரிவிதிப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது எனது ஆட்சேபனையை மீறி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கிற்கு பிறகு நான் எனது மகள் ஒருவருக்கு திருமணம் செய்துவைத்துள்ளேன், இன்னும் ஒரு மகளுக்கு திருமணம் செய்யவேண்டியுள்ளது. எனக்கு திருமணமாகாத பெண் மகள் இருந்து வருகிற நிலையில் தாவா கிரைய ஆவண காலத்திற்கு பிறகு வழக்கு சொத்தில் நான் வாடகை அடிப்படையில் குடியிருந்து கொள்ள 4ம் பிரதிவாதியுடன் வாய்மொழி ஒப்பந்தம் பிறப்பித்து அதன் அடிப்படையில் மட்டுமே நானும் என் பெண் மக்களும் வழக்கு சொத்தில் குடியிருந்துவருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் 4ம் பிரதிவாதிக்கு வாடகை

பணம் செலுத்திய தொகையை நான் எனது பிராதில் வட்டி பணம் கொடுத்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுகின்றபடி பார்த்தாலும் நான் வழக்கு பிரதிவாதிகளிடம் பெற்றுக்கொண்டதாக கூறுகின்ற கடன்தொகையை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான், ஆனால் பணத்தை பிரதிவாதிகளிடம் நேரில் கொடுக்க முயற்சிசெய்தேன், அவர்கள் வாங்க மறுத்துவிட்டார்கள். 4ம் பிரதிவாதி எழுதி வாங்கியுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றும், அதனை ரத்து செய்ய நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi
Date: 2025.07.19 17:43:03 +0530